# தாந்திரீகம்



ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | தாந்திரீகம் |
| **ஆசிரியர்** | : | ப்ரக்ஞுன் |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **வகை** | : | விழிப்புணர்வு |
| **முதற்பதிப்பு** | : | 2023 |
| **பக்கங்கள்** | : | 37 |
| **விலை** | : | அக விழிப்பு |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | முகவுரை | 05 |
| 2. | தாந்திரீக வழிபாட்டு முறைகள் | 07 |
| 3. | பிரக்ருதி (பெண்மைக் கோட்பாடு) | 18 |
| 4. | தேகத் தத்துவம் | 19 |
| 5. | வாமாச்சாரம் | 20 |
| 6. | பஞ்ச மகரங்கள் | 23 |
| 7. | தமிழ்நாட்டில் தாந்திரீகம் | 25 |
| 8. | குறியீடுகள் | 26 |
| 9. | முடிவுரை | 32 |

# தாந்திரீகம்

விளக்க உரை

ப்ரக்ருன்

# 1. முகவுரை

அனைத்து ஆன்மீக சாதகர்களுக்கும், அடியேனின் அன்பு கலந்த வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, இந்த நூல் நம்முடைய அறியாமைகளை சுட்டிக் காட்டவே இங்கு கொடுக்கப்படுகின்றது. இதில், சில விசயங்கள் சிலருடைய மனதைப் புண்படுத்துவதாகத் தெரியலாம். அது அவர்களின் மனப்பான்மையைப் பொருத்து, தவறான புரிதல் என்றே அறிய வேண்டும். அதற்கான விடையை அவரவர்கள் மனதை விசாரித்து அறிந்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

மற்றபடி, இங்கு யாரையும், யாருடைய மத நம்பிக்கை களையும் புண்படுத்தக்கூடிய வகையிலே, எந்த விசயமும் இந்த நூலில் கிடையாது.

மனிதன் என்பவன் மனதைக் கொண்டதின் உள் நோக்கமே, அவன் தன்னைத்தான் அறிந்துக் கொள்வதற்காகக் கிடைத்த பிரத்யேக பகுத்தறிவின் வாயிலாக, எதையுமே அணுகவேண்டும் என்பதையே, எல்லா ஞானிகளும், யோகி களும், சித்தர் பெருமக்களும் அறிவுறுத்துகின்றார்கள்.

அவர்களது ஆழந்த நுண்ணிய, ஆழமாக கருத்துக் களை புரிந்துக் கொள்ள வேண்டுமானால், நாம் நம்முடைய மனதை திறந்த நிலையில் வைத்துக்கொண்டு, அவர்கள் கூற வருவதை உள்வாங்க வேண்டும். அதை விடுத்து, ஏற்கனவே, ஏற்றி வைத்துக்கொண்ட ஏராளமான அறியாமை எண்ணங் களைக்கொண்டு, அவைகளோடு எதையும் ஒப்பீடு செய்வது, நம்முடைய அறியாமையை மேலும் வலுவாக்குவதாக அமைந்துவிடும்.

ஆகவே, அனைவரும், திறந்த மனதுடன் எதையும் அணுகுங்கள். அப்போது மட்டும்தான், தங்களின் உண்மை யான தேடுதலுக்கான விடைகள் விரைவில், உங்களது உள்ளத்திலிருந்தே வெளிப்படும். இந்த "தாந்திரீகம்" என்ற நூல் கொடுக்கப்பட்டதின் நோக்கம் என்னவெனில், தாந்திரீகம் என்றால் என்ன? என்பதை எல்லோரும் அறிந்துக் கொண்டு பயனடைய வேண்டும் என்ற நல் நோக்கத்திலேயே ஆகும்.

நன்றி!

என்றும் அன்புடன்.

**ப்ரக்ஞன்**

## 2. தாந்திரீக வழிபாட்டு முறைகள்

மனிதனிடத்தில் இந்த மனம் வெளிப்படுவது குறியீடுகள் வழியாகவேயாகும். இந்தியத்தத்துவங்களையும், பாரம்பரியங்களையும் ‘**வேதநெறி**’ என்றும், ‘**வேத மறுப்பு நெறி**’ என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம்.

இவற்றுள் வேத நெறி தொடர்பான கருத்துக்களும், சிந்தனைகளுமே இந்தியாவில் முதன்மை செலுத்தி வந்தன (வருகின்றன).

ஆனாலும், வேதநெறி சாராத வேத மறுப்புச் சிந்தனைகள் அடங்கிய தத்துவங்களும் இந்தியாவில் தோன்றி வளர்ந்துள்ளன. அவ்வாறு உருவான சிந்தனைப் போக்குகளில் ஒன்றே தந்திரம் அல்லது தாந்திரீகம் ஆகும்.

தாந்திரீகம் என்பது, பொதுப்படையானச் சொல். ஞானத்தை அடைய விரும்பும் ஒருவன் சடங்குகள்மூலம், சுயமேம்பாடு செய்துக் கொள்ளும் எல்லா வழிமுறைகளையும், ஒட்டுமொத்தமாக தாந்திரீகம் என்கிறோம்.

# தாந்திரீகம்

தாந்திரீகம் எனப்படும் வழிபாட்டு முறையை பெரும் பாலும் இந்தியா மற்றும் திபெத் பகுதிகளில் வழிபடுவர்களான சாக்தம் என்ற சமயத்தை சார்ந்தவர்கள் வழிபாட்டு முறையாகக் கொண்டிருக்கின்றனர்.

மேலும், வச்ராயான பௌத்த சமயப்பிரிவுகள் மற்றும் சுவேதாம்பர பௌத்த சமயப்பிரிவுகள் சார்ந்தவர்களும், இந்த தாந்திரீக வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

நம்முடைய இந்து சமயத்தில் இத்தகைய தாந்த்திரீக முறையில் வழிபட மந்திரங்கள் மிகவும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இந்த தாந்திரீக மந்திரங்களில் மற்ற சமயத்த வர்களின் மந்திரங்களைவிட, இரு முக்கியமான அம்சங்கள் உண்டு.

அவைகள், "**பீஜ மந்திரம்**" (விதை போன்றது) என்றும், "**சக்தி மந்திரம்**" என்றும் கூறப்படுகின்றது.

அதிலே, **பீஜ மந்திரம்** என்பது, ஒரே ஒரு எழுத்தை மட்டும் கொண்ட சிறப்பான ஆன்மீக சக்தி கொண்டது. வெவ்வேறு வகையான கடவுளைக் குறிக்க வெவ்வேறு வகையான பீஜ மந்திரங்கள் உண்டு.

தந்திர மார்க்கத்தில் ஒவ்வொரு மந்திரமுமே, ஓர் பீஜ மந்திரத்துடன்தான் தொடங்கும்.

பீஜ மந்திரத்துடன் தொடர்புடைய மந்திரங்களே அதிக சக்தியுடையதாக கருதப்படுகிறது. இதற்கு, ஒரு குருவின் மூலம் தீட்சையாகப் பெறப்பட்ட மந்திரத்தைத் திரும்பத் திரும்பக் கூறுவதால், இறைக்காட்சி கிட்டுவது எளிதாகும் என்ற நம்பிக்கையும் உண்டு.

அதோடு, இத்தகைய மந்திர உச்சரிப்புக்களோடு, இறைவனுக்குப் படைக்கப்படும் பொருள்களையும் இறைவன் உடனேயே ஏற்றுக்கொண்டு விடுவதாகவும் நம்பப்படுகிறது.

அதாவது, யந்திரங்கள், மந்திரங்கள் தாந்திரீக வழிபாட்டோடு தொடர்பு உடையவைகள். அவைகள் புனிதம் மிக்கதும், யோக சக்தி வாய்ந்ததும் என்று நம்பப்படுகின்றன.

இதிலே, தாமஸகுணம் கொண்ட சாதகர்களின் வழிபாட்டுக்குரிய தேவியின் குறியீடுகள் இங்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களில் உள்ளதுப் போன்று காணப்படும்.



மாதவிடாய் வருகின்ற பெண் தெய்வம்



பெண் யோனி - [காமாக்யாதேவி கோவில் மூலவர்]




**காமாக்யாதேவி கோவில் - அஸ்ஸாம் மாநிலம்**
**[இந்த கோவில் 51 சக்தி பீடங்களில் ஒன்று]**



**ஆண்குறி லிங்கம்**

அதுவே, சாத்வீககுணம் கொண்ட சாதகர்களின் வழிபாட்டுக்குரிய குறியீடுகள் மற்றொரு விதமாக கீழே உள்ள நிலையில் இருக்கும்.





இதிலே, சில யந்திரங்கள் கடவுளின் அடையாளமாகக் குறிக்கப்பட்டு வழிபடப்படுகிறது.

**எடுத்துக்காட்டு:** ஸ்ரீசக்கரம் (தேவி யந்திரம்).

குறியீடுகள் மற்றும் குறியீட்டுச் செயல்பாடுகள் மூலம் ஆழ்மனத்தை பயிற்றுவித்து, அதன் மூலம் வல்லமையைப் பெருக்கிக்கொள்ளும் ஆன்மீக வழிமுறைகள் எனலாம்.

நம்மைச் சுற்றியுள்ள இந்த புற உலகை அறியும் முயற்சியில் நம் முன்னோர்கள் உருவாக்கிய வாழ்க்கை நெறிகளுள் ஒன்றாக தாந்திரீகம் அமைந்தது.

கற்பனையினை அடிப்படையாகக் கொள்ளாது, நம்முடைய அன்றாட வாழ்க்கையினையும், பொருள்களின் இயக்கத்தையும் உற்று நோக்கியதன் அடிப்படையிலேயே தாந்திரீகம் உருவாகியுள்ளது.

மேலும், வேத நெறிக்கு மாறான ஒரு நெறியாக தாந்திரீகத்தை உருவாக்க சாதி, தொழில் என்ற இருநிலைகளிலும் மேலாண்மை பெறாத சிந்தனையாளர்கள் முயன்றுள்ளனர்.

அதே நேரத்தில் தாந்திரீகம் என்பது மது, மாது ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒழுக்கக் கேடான நெறி என்றும் சிலர் கூறுகின்றனர். இதிலே, இன்னும் சிலர் யோகம், எந்திரம், மந்திரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதே தாந்திரீகம் என்றும் விளக்கமளிக்கின்றனர்.

மேலும், **இந்து - புத்த - சமண - சைவ - வைணவ** சமயங்களிலும் தாந்திரீகத்தின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க

அளவு இடம்பெற்றுள்ளது. ‘**இந்து தாந்திரீகம்**’, ‘**புத்த தாந்திரீகம்**’ என்றுகூட தாந்திரீகத்தைப் பாகுபாடு செய்து வைத்துள்ளனர்.

பிற்காலத் தாந்திரீகர்கள் சிலர் தாந்திரீகத்தின் அடிப்படை நெறிக்கு மாறாக, அதனை வேதத்துடன் தொடர்பு படுத்தியுள்ளனர்.

மீமாம்சை மரபுப்படி தாந்திரீகம் ஒரு செயல் முறை – ஏதேனும் ஒன்றை உருவாக்கும் அல்லது செய்யும் வழி முறையாகும்.

மஹாபாஸ்யத்தின் அறிவுத்துறையைக் குறிக்கும் சொல்லாக தாந்திரீகம் இடம் பெற்றுள்ளது. அதே நேரத்தில் ஆன்மிக அறிவின் குறியீடாக அமைந்த வேத நெறியுடன் இது மாறுபட்டு இருந்தது.

புனிதமாகக் கருதப்பட்ட வேதம் உயர் வர்க்கத்தினரின் உடைமை ஆகும் என்றும், அதிலே உபநயனம் என்ற சடங்கு, குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே உரியது என்ற நிலையும் ஏற்பட்ட பிறகு, வேத நெறியினைப் பெறுவது குறித்து அடித்தள மக்கள் நினைத்துக் கூடப்பார்க்க முடியாத ஒன்றாக அன்றைய கால கட்டங்களில் சிலர் ஏற்படுத்தி இருந்தனர்.

ஆகவே, வேதத்தைக் கற்கும் சூத்திரன் மரண தண்டனைக்கு ஆளாகும் நிலை அன்று நடைமுறையில் இருந்தது. (இது சில மூட அரசர்கள் விதித்த சட்ட திட்டங்கள் ஆகும்).

இத்தகைய வரலாற்றுச் சூழலில் வேத நெறிக்கு இணையான ஒரு நெறியாக உருவானதே தாந்திரீக நெறி ஆகும். எனவே வேத எதிர்ப்பு இயல்பாகவே தாந்திரீகத்தில் இடம்பெற்றது.

வேத மரபானது ஆண்மைக் கோட்பாட்டை அடிப்படை யாகக் கொண்டிருந்தது. வருணாச்சிரம முறையினைப் பாதுகாப்பதை வேத நெறி வலியுறுத்த, அதற்கு எதிரிடையான நிலையினைத் தாந்திரீகம் மேற் கொண்டிருந்தது.

இதன் காரணமாகவே, வேதநெறி சார்ந்தவர்கள் தாந்திரீகத்தை இழித்தும், பழித்தும் கூறியுள்ளனர்.

வேதங்கள் தாந்திரீக நெறியை ஆதரிக்கவில்லை என்றும், தாழ்ந்த சாதி மக்களிடையேதான் தாந்திரீகம் வழக்கத்திலுள்ளது என்றும், அன்றைய காலகட்டத்தில் வாழ்ந்த யாமுனாச்சாரியர் என்பவர் தமது, '**ஆகம பிராமணியா**' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வேத சடங்குகளில் இருந்து பிறழ்ந்தவர்களுக்கும், வேத நோன்புகளுக்கு அஞ்சுபவர்களுக்கும் உரியதுதான் தாந்திரீக மாகும் என்று '**சாம்ப புராணம்**' கூறுகிறது.

தாந்திரீக நெறியைப் பின்பற்றுபவர்களைச் சமூகப் புறக்கணிப்புச் செய்ய வேண்டுமென்றும், அவர்களோடு சமூக உறவு கொண்டவர்கள் அதற்காகப் பிராயச் சித்தச் சடங்குகளைச் செய்ய வேண்டும் என்றும் ஸ்மிருதிகள் சில குறிப்பிடுகின்றன.

[**இதிலே, ஸ்மிருதிகள் என்பது அந்தந்த காலகட்டங்களின் அன்றைய அரசர்களால் உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்கள் ஆகும்.**]

இவ்வாறு வேத நெறிக்கு மாறுபாடான நெறியாக அமைந்த தாந்திரீகம் சாதி நிலையில் கீழானவர்களாகக் கருதப்பட்டவர்களின் நெறியாக அமைந்தது.

தாந்திரீக ஆசான்களில் பலரும் தொழிலாலும், சாதியாலும் கீழ் நிலையானவர்களாகவே இருந்தனர் என்று கூறப்படுகின்றது.

அதாவது, குதிரை இலாயத்தை சுத்தம் செய்பவர், தோல் தொழில் செய்பவர், வண்ணார், மரம் வெட்டி, கொல்லர், பறவை, மிருகங்களை பிடிப்பவர்கள், தையற்காரர், செருப்பு

தைப்பவர், மீன் பிடிப்பவர் எனப் பல்வேறு தொழில்களைச் செய்தோர்கள் தாந்திரீக நூல்களின் ஆசிரியர்களாக இருந்தனர்.

அத்தகைய தாந்திரீக ஆசிரியர்களுள் தலை சிறந்தவர் களாகப் போற்றப்படும் ஆதி சித்தர்கள் ஐவரும் சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து வந்தவர்களே ஆவர்.

மேல்நிலையினருக்கு மட்டும் உரித்ததாயிருந்த வேதநெறிக்கு ஈடாக, தமக்கென ஒரு வாழ்க்கை நெறியை உருவாக்கும் முயற்சியில் தோன்றியதே **தாந்திரீகம்** என்பதை மேற்கூறிய செய்திகள் நமக்கு உணர்த்துகின்றன.

இனி, தாந்திரீகத்தில் முக்கிய இடம்பெற்றுள்ள விசயங்கள்:–

1. **பிரகிருதி**
2. **தேகத் தத்துவம்**
3. **வாமாச்சாரம்**
4. **பஞ்சமகரம்**
5. **குறியீடுகள்** ஆகியன குறித்துக் காணலாம்.

## 3. பிரக்ருதி (பெண்மைக் கோட்பாடு)

தாந்திரீகர்களின் கருத்துப்படி, உலகப்படைப்பின் ஆதிமூலமாக அமைவது, ‘**பிரக்ருதி**’ எனப்படும் பெண்மைக் கோட்பாடாகும்.

‘**சக்தி**’ என்றும் இதனை அழைக்கிறார்கள். நிலம், நீர், நெருப்பு, காற்று, விண் என்ற சேர்க்கையால் உருவாக்கப் பட்டதே இவ்வுலகமாகும். இதன் குறியீடாகவே தாய்த் தெய்வமான ‘**சக்தி**’ [ஈஸ்வரி] அமைகிறாள்.

உலகப் படைப்பிற்கு முன் பிரகிருதி மட்டுமே இருந்தது என்றும், இதிலிருந்தே உலகிலுள்ள அனைத்துப் பொருட்களும் உற்பத்தியாயின என்றும் தாந்திரீகம் கூறும்.

இதன் அடிப்படையிலேயே தாந்திரீக வழிபாட்டிலும், சடங்குகளிலும் பெண்களுக்கு முக்கியத்துவம் உள்ளது. பெண்கள் குறியும், பூப்புக் குருதியும் தாந்திரீகச் சடங்குகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

## 4. தேகத் தத்துவம்

மனித உடலை ‘**மெய்**’ என்று அங்கீகரித்து, ஆன்மிக மற்றும் சமய அனுபவங்களின் இருப்பிடமாக உடலைக் கருதுவதே தேக தத்துவமாகும்.

பிரபஞ்சம் என்ற பேரமைப்பின் ஒரு துகளே மனித உடலாகும்.

எனவே, பிரபஞ்சமானது உடலில் உறைகின்றது.

ஆகையால், உடலை அறிவதன்மூலம் பிரபஞ்சத்தை அறியமுடியும். அதனை வயப்படுத்துவதன் வாயிலாக பிரபஞ்சத் தையும் கட்டுப்படுத்த முடியும்.

இதுவே மனித உடல் தொடர்பான தாந்திரீகர்களின் கருத்தாகும். இதன் காரணமாகவே உடலைப் பேணும் பல்வேறு யோக நெறிகளையும் தாந்திரீகம் வலியுறுத்துகிறது.

## 5. வாமாச்சாரம்

ஆன்மிகப் பேற்றினை அடையும் வழி முறைகளாக ஆசாரங்கள் கூறப்படுகின்றன. இவற்றை, 'தட்சிணாச்சாரம்', '**வாமாச்சாரம்**' என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். அதாவது, வலது – இடது என்று பிரிக்கின்றனர்.

இவ்வாமாச்சாரங்களின் இயல்புகள் குறித்தும், அவற்றை வகைப்படுத்துதல் குறித்தும், கருத்து வேறுபாடுகள் பல உண்டு. இவைகள் அனைத்தையும் இங்கு விவாதிக் காமல், தாந்திரீகத்தில் முக்கிய இடம்பெறும் **வாமாச்சாரம்** குறித்து மட்டும் காணலாம்.

**வாமா + ஆச்சாரம்** என்ற இரு சொற்களும் இணைந்து உருவானதே '**வாமாச்சாரம்**' ஆகும். '**வாமா**' என்பது பெண் அல்லது இணைவிழைச்சு வேட்கையைக் குறிக்கும். '**ஆச்சாரம்**' என்பது செய்முறையைக் (இங்கு சடங்கியல் செய்முறை) குறிக்கும்.

எனவே, வாமாச்சாரம் என்பது பெண் மற்றும் இடது தொடர்பான சடங்கியல் செய்முறைகளைக் குறிப்பதாகும். (சட்டோபாத்தியாயா, 1978 : பக்கம் 278).

இதன்படி குறிப்பிட்ட காலங்கள் வரை முறையற்ற பாலுறவில் தாந்திரீகர்கள் ஈடுபடுவர்.

இத்தகைய வாமாச்சாரத்தைப் பின்பற்றுபவர்கள் பெண்தெய்வங்களை, பாரம்பரியமான முறையில் பகற்பொழுதில் வழிபடுவர். இரவில் பஞ்சமகரங்களின் துணையுடன் தாந்திரீக முறையில் மது, மாது, மாமிசம் போன்றைவகளால் வழிபடுவர்.

வேதச்சடங்கு நெறிகளை அவர்கள் கைவிடுவதோடு, திருமாலின் பெயரை உச்சரிக்கவோ, துளசி இலையைத் தீண்டவோ கூடாது. மேலும், பிராமணர்களைத்தவிர அனைத்துச் சாதியினருக்கும் வாமாச்சாரம் உரியதாகும் என்பதை வலியுறுத்துகின்றனர்.

வேத நெறியினின்றும் பிறந்த – வெளிப்படையாக வேத நெறியை விட்டு விலகிய பிராமணர்கள் மட்டுமே இந்த வாமாச்சாரத்தைப் பின்பற்ற முடியும்.

தாழ்ந்த வருணத்திற்கான ஆச்சாரமாகவே இந்த வாமாச்சாரம் விளங்கியது. (பட்டாச்சார்யா: 1982, பக்கம் 343)

இனி வாமாச்சாரத்தின் உள்ளார்ந்த பொருள் என்ன? என்பதனைப் பார்க்கலாம். வக்கிரமான பாலுணர்வு நோக்கில் வாமாச்சாரம் தோற்றமளித்தாலும், உண்மையில் வேளாண் மைச் சமுதாயத்தின் உற்பத்தித் திறமை அதிகரிக்கச் செய்யும்

சடங்கியல் தன்மையே வாமாச்சாரத்தில் மேலோங்கி இருந்ததாக சட்டோபாத்தியாயா கருதுகிறார். (1978: பக்கங்கள் 272 – 286)

இச்சடங்கியல் தொடர்பான செய்திகளை ஆராய்ந்தால் தொல் அறிவியல் கூறுகள் பலவற்றை நாம் கண்டறிய முடியும்.

# 6. பஞ்சமகரங்கள்

தாந்திரீகர்களின் ஐந்து சடங்குகளே பஞ்சமகரங்கள் எனப்படுகின்றன. இவற்றைக் குறிக்கும் சொற்கள் '**ம**' என்ற எழுத்தில் தொடங்குவதால், இவ்வாறு பெயர் பெற்றுள்ளன.

அவைகள், மத்யா (மது), மாமிசம், மைதுனம் (உடலுறவு), மூத்ரா (வறுத்த தானியம்), மச்சம் (மீன்) என்ற ஐந்தும் பஞ்சமகரத்தில் இடம் பெறுகின்றன.

இவைகள் ஐந்திற்கும் உள்ளார்ந்த விளக்கத்தை தாந்திரீக நூல்கள் சில அளிக்கின்றன. 'குலார்ணவ தந்திரம்' என்ற நூலில் குலாகுண்டலினி சக்தியின் தலையிலுள்ள தாமரை மலரிலிருந்து வடியும் அமிர்தத்திற்கு ஈடாக மது குறிப்பிடப்பட்டுள்ளது.

அதை, **அறிவு** என்ற வாளால் தன்னுடைய அகங்காரத்தை விரட்டுவதே **மாமிசம்** ஆகும்.

உண்மையில், இங்கு **உடலுறவு** என்பது, அந்த உயர்ந்த சக்தியுடன் தான் இணைவதன் குறியீடாகும்.

[**<u>குறிப்பு:-</u>** ஆனால், இன்று அது தவறாகப் புரிந்துக் கொள்ளப்பட்டு, ஆண் – பெண் தகாத உறவுகளை மேற்கொண்டும், கடவுளுக்கு படைக்க மதுவையும், மாமிசத்தையும் வைத்து வழிபாடு செய்வதும் நடைமுறையில் இருப்பதை, தந்திரா என்று கூறிக்கொண்டு, தவறான பாலுணர்வு மற்றும் புலன் இன்பங்களில் சிலர் ஈடுபடுகின்றனர்.]

# 7. தமிழ்நாட்டில் தாந்திரீகம்

தாந்திரிக நெறியானது தமிழ்நாட்டிலும் வழக்கத்தில் இருந்துள்ளது. தாந்திரீக மரபுவழி நின்றவர்களாகத் தமிழ்நாட்டு சித்தர்களைக் குறிப்பிடலாம்.

சாதி வேற்றுமைக்கு எதிரான குரல் – வேத மற்றும் பிராமணிய எதிர்ப்பு – போலி ஆசாரங்களை கேளி செய்தல் – உடலோம்பலை வலியுறுத்தல் – போன்ற தாந்திரிகக் கருத்துக்களின் செல்வாக்கை, சித்தர் பாடல்களில் பெரிதாகக் காணலாம்.

தாந்திரீக வழிபாட்டு நெறியுடன் தொடர்புடைய சிற்பங்களும், தமிழகக் கோவில்கள் சிலவற்றில் காணப்படுகின்றன.

மேலும், தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் நடைபெறும் வேளாண்மைச் சடங்குகளிலும், தாந்திரீக மரபின் எச்சங்களைக் காணலாம்.

# 8. குறியீடுகள்

தாந்திரீகம் குறியீடுகளை ஏராளமாக உருவாக்கிக் கொள்கிறது.

நம்முடைய புராணங்கள், சிற்பங்கள் போன்ற ஏராளமான குறியீடுகள் தாந்திரீகத்தால் உருவகிக்கப் பட்டவையே. அதுப்போல, நம் உடல், மனம் பற்றியும் தாந்திரீகம் ஏராளமான குறியீடுகளை உருவாக்கியிருக்கிறது.

அக்குறியீடுகளை உருவத்தில் பார்ப்பதால், கண்களுக்கு புலனாகின்ற திட நிலையிலே (வடிவத்திலே) உள்ளதால், அவைகளை உண்மைகளாக மனம் எடுத்துக் கொள்கிறது. இது மனதின் அறியாமை நிலை என்று கூறலாம்.

வழிபாட்டு முறைகளில் தாந்திரீகம் இரண்டு வழி முறைகளைக் கடைப் பிடிக்கிறது. அவைகளை, ‘**தட்சிணாச்சாரம்**’, ‘**வாமாச்சாரம்**’ எனவும், மேலும் வலது – இடது முறைகள் என்றும் அழைக்கின்றார்கள்.

அதிலே, மனதை நெறிப்படுத்த கையாளும் முறைகளில் மந்திரம், யந்திரம், தந்திரம் என்ற வழிமுறைகளில் தந்திரம்

என்பது, பூசைகள், மந்திர ஜபதபங்கள், பீஜ மந்திரங்கள் போன்றவைகளை உள்ளடக்கிய தாந்திரீகம் என்பது, நம்முடைய இந்திய மற்றும் பௌத்த, சமண மதங்கள் கையாளுகின்ற வழிபாட்டு முறைகள் எனலாம்.

மனதின் வெளிப்பாடுகளை அறிய, அந்த மனவெளிப் பாடுகளையே மனதினால் நிகழ்த்தி, அதன் எல்லையை அறிகின்ற ஒரு வழி இருக்கின்றது.

இதுதான் **வாமாச்சாரம்** என்கிற இடது வழி முறையாகும்.

அது எப்படி என்றால்? காமத்தை வெல்ல காமத்தையே பழகுவது. பயத்தை விரட்ட, பயமூட்டும் விசயங்களில் அதிகம் ஈடுபடுவது. மரணத்தை பயமாகப் பார்த்தால், சுடுகாட்டு பிணத்தின் மீது அமர்ந்துக்கொண்டு தியானம் செய்வதுப் போன்ற ஒரு உக்கிரமான வழிமுறைகள்தான் அவைகள்.

இதைத்தான் அகோரிகள் மேற்கொள்கிறார்கள்.

இன்னும் சிலர் காளி, பிரத்யங்கரா தேவி, ஐயனார், முனியப்பன், கருப்பராயன் போன்ற தாமஸ முறை வழிபாடுகளை மேற்கொண்டு, மது, மாமிசம் போன்றவற்றை கடவுளுக்கு படைத்து வழிபாடு மேற்கொள்கின்றனர்.

இவர்கள் பரமனை இன்னவென்று அறிய முடியாத பாமர மக்களாகவே இருப்பதினால், மனம் போன போக்கிலேயே சென்று, அந்த மனதை அறிய முயற்சி செய்கின்றார்கள்.

இதுவே, தாந்திரீக வழிபாட்டு முறைகளில் ஒன்றான இடதுமுறை என்கின்ற வாமாச்சாரம் ஆகும். இது மனதின் ஒரு அறியாமை நிலை என்றுதான் ஞானிகளும், யோகிகளும் கூறுகின்றனர்.

ஆனால், உண்மையாகவே மனதின் வெளிப்பாடுகளை வெல்ல வேண்டுமானால், அதன் வெளிப்பாடுகளை உன்னதமான வழியில் திசை திருப்பலாம் என்பது, மற்றொரு வழி முறையில் உள்ளது. அதுதான் மனதிற்கு புரிதலை உண்டாக்கும் வழிமுறையாகும். அதனை தட்சிணாச்சாரம் (வலது முறை) என்று கூறப்படுகின்றது.

இதில், காமத்தை வெல்ல அதையே குறியீடாக ஆக்கி, (உதாரணம்:– சிவலிங்கம்) அக்குறியீட்டை கலைகளாக ஆக்கி, அக்கலையின் உன்னதங்கள் வழியாக காமத்தை அறிந்து கடந்து செல்லலாம்.

இத்தகைய சாத்வீகமான உருவ வழிபாட்டு முறையில் பயம், வன்முறை, அருவருப்பு என எல்லாவற்றையுமே

எளிதாகக் கடந்து செல்லலாம். இதுவே, உருவ வழிபாட்டில் உன்னதமான வழிமுறை ஆகும்.

இம்முறையின் முக்கியமான வழிமுறைகள் என முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டதுதான் சடங்குகள், பூஜைமுறைகள், ஜபதபங்கள், பீஜ மந்திரங்கள் மற்றும் கலைகள் என பல வழிமுறைகளைக் கொண்டது.

இத்தகைய இரு தாந்திரீக வழிமுறைகளுமே யோகத்தை தங்கள் தேவைக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்கின்றன.

இதைத்தான் **மணி, மந்திர, ஔசதம்** எனப்படுகின்றது.

இவ்விரு வழி முறைகளிலும் பலவகையான உருவகங்களையும், குறியீடுகளையும் உருவாக்கிக் கொண்டு வழிபாட்டில் தாந்திரீகம் கொண்டு வரப்பட்டன.

அக்குறியீடுகள் எளிமையான சித்தர் பாடல்கள் வழியாக சாதாரண மக்களிடம் வரும்போது, அவைகளின் ஆழமான உட்பொருளை அறியாமல், அப்படியே அந்த உருவத்தை மட்டும் நேரடியாக எடுத்துக்கொண்டு, அதன் உள்ளார்ந்த அர்த்தத்தை புரிந்துக் கொள்ள முடியாமல், பாமர மக்கள் இருப்பதினால், அவர்களது மனதின் அறிவுப் பரிமாணம் இன்னும் மேல் நிலைக்கு உயர வேண்டிய கட்டாயம் உள்ளது.

அதற்கான ஒரே வழி ஆன்மவியல் கல்வி கற்பது மட்டுமே ஆகும்.

பொதுவாக, கல்வி என்பது, நம்முடைய புற அறிவை வளர்த்துக் கொள்ள மட்டுமே என்று பெரும்பாலானவர்கள் கருதுகின்றார்கள். ஆனால், அந்த புற அறிவுக்கு ஆதாரமான அக அறிவை வெளிப்படுத்தக்கூடிய கல்வி முறைகளை நாம் கற்பதற்கு தயாராக இல்லை.

இன்றைய சமுதாயம் கல்வி என்பது பணம் சம்பாதிக்க மட்டுமே தேவை என்று கருதுகின்றது. அதற்கான புற அறிவுகளை மேம்படுத்திக் கொள்ள மட்டுமே அதிக ஆர்வம் காட்டுகின்றது.

ஆனால், மனிதன் தன்னை மகத்தானவனாக அறிந்துக் கொள்ளக்கூடிய, தன்னை அறியும் தனித்துவமான ஆன்மவியல் கல்வியை கற்க முன்வர வேண்டும் என்று மகான்கள் வலியுறுத்துகின்றார்கள்.

அத்தகைய ஆன்மவியல் கல்வியைக் கற்க முடியாத வர்கள் கடவுளைக் கற்சிலைகளிலும், குறியீடுகளிலும் கண்டு, அதற்கான பூசைகள், மந்திரங்கள் என சாதாரண உருவ வழிபாடுகளிலேயே நின்று விடுகின்றார்கள். அது அவர்களின் அறியாமை நிலையை காட்டுகின்றது எனலாம்.

இதிலே, தன்னுள்ளே தன்னைத் தேடி உணர்ந்துக்கொண்ட உத்தம சித்தர் பெருமக்கள் தாங்கள் சென்ற உயரிய ஆன்மீகப் பாதையைப் பல பாடல்களில் பாடி மக்களுக்கு புரிய வைக்க முயன்றிருக்கின்றனர். ஆனால், அத்தகைய பாடல்கள் பெரும்பாலும் பரிபாசை பாடல்களாக இருப்பதினால், தக்க ஆசிரியர் துணைக்கொண்டு, அவைகளைக் கற்கின்ற போதுதான் அதன் ஆழமான உட்பொருள் புரிய வரும்.

# 9. முடிவுரை

இதுவரை நாம் அறிந்துகொண்ட செய்திகளின் அடிப்படையில் ‘**தாந்திரீகம்**’ தொடர்பான அடிப்படை உண்மைகளை இவ்வாறு தொகுத்துக் கூறலாம்.

1. இந்தியாவின் பாரம்பரியமான, தத்துவ – வாழ்க்கை நெறிகளுள் தாந்திரீகம் ஒன்று.

2. பெண் தெய்வ வழிபாடு, மந்திரத்துடன் இணைந்த வேளாண்மைச்சடங்குகள் ஆகியவற்றுடன் தாந்திரீகம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது.

3. இவ்வுலகமும், உடலும் உண்மை என்பதை தாந்திரீகம் ஏற்றுக் கொண்டது. எனவே, வாழ்க்கை மறுப்பை வலியுறுத்தாது, வாழ்க்கை இன்பத்தை வலியுறுத்தியது.

4. வேத நெறியுடன் முரண்பட்டும், சாதி மேலாண்மையை எதிர்த்தும் நின்றது.

5. இத்தன்மையினால் தாழ்ந்த சாதியரின் நெறியாக இது அமைந்தது.

6. தொல் அறிவியல் கூறுகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது. தாந்திரீகமானது, அது தோன்றிய காலத்தில் முற்போக்கான கூறுகளைத் தன்னகத்தே கொண்டு இருந்தமையை மேற்கூறியனவற்றிலிருந்து நன்கு உணரலாம்.

**சார்வாகம், சாங்கியம், சூ:பியிசம்** போன்ற, பல்வேறு முற்போக்கான சிந்தனைகளின் உருவாக்கத்திலும் இந்த தாந்திரீகத்தின் பங்களிப்பு உண்டு.

காலப்போக்கில், பல்வேறு மதங்களின் பாதிப்பினால் தாந்திரீகமானது தன் வடிவங்களை மாற்றிக் கொண்டுள்ளது.

உண்மையில், '**தாந்திரீகம்**' என்றால், தன்னைத்தான் அறியும் ஒரு "**தொழில்நுட்பம்**" என்று கூறலாம். ஆனால், சில மேற்கத்திய நாட்டினர்களின் தவறான புரிதல்களினால், அவைகள் நம்மிடையே ஒரு காம சாஸ்திரமாக மாற்றப்பட்டு புகுத்தப்பட்டது.

அதனால், மக்களின் மனதில் மெதுவாக, தாந்திரீகம் என்ற வார்த்தைக்கு, காமம் என்ற அர்த்தம் தங்கிவிட்டது. அது அன்று முதல் இன்று வரை நடைமுறையில் இருப்பதால், சில தவறான சிற்றின்ப செயல்கள் இன்றும் நடைமுறையில் உள்ளன. ஆனால், உண்மையில் தாந்திரீகத்திற்கும், காமத்திற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை.

தாந்திரீகம் என்பது மனதை அறியக்கூடிய ஒரு மக்த்தான **உருவ வழிபாட்டு வழிமுறை** ஆகும்.

அதன் வாயிலாக, நமக்கு வேண்டியதை உருவாக்கு வதற்காகவும், தேவையற்றவைகளை வெளியேற்றுவதற் காகவும் உருவாக்கப்பட்ட ஒரு **தொழில்நுட்பம்** என்றே கூறலாம்.

நமக்கு வேண்டியவாறு, பொருளாதார சூழ்நிலைகளை உருவாக்குவது தான், இந்த பருப்பொருள் தொழில் நுட்பமாகிய "**தாந்திரீகம்**" ஆகும்.

அதுப்போல, மனித மனங்கள் தங்களுக்கு வேண்டியதை உருவாக்க முயற்சிக்கின்ற போது, மனம் நிறைய விஷயங்களைக் கேட்கும். அதன் காரணமாக, நம்முடைய பிரார்த்தனைகள் எல்லாவற்றுக்கும் பதில் அளிக்கப்பட்டு விட்டால், நமது வாழ்க்கைப் பெரும் அழிவை சந்திக்க நேரிடலாம்.

காரணம், நம்மிடையே மனதின் மேம்பட்ட புரிதல்கள் இல்லாத, பல தவறான பிரார்த்தனைகளும் உள்ளன. அதனால், நமக்கு வேண்டிய பொருளாதார சூழ்நிலைகளை உருவாக்குவதில் தாந்திரீகத்திற்கு நம்பிக்கை கிடையாது.

அதேசமயம், அசாதாரணமான நம்முடைய அறிவிற்கு அப்பாற்பட்ட வடிவங்களையும், அடையாளங்களையும், நம்மிடம் இல்லாத திறன்களைக் கொண்ட விவேகத்தையும் உருவாக்

குவதே உண்மையில் தாந்திரீகத்தின் உயரிய நோக்கம் ஆகும்.

யோகாவில் அதனை **தந்திரயோகா** என்று கூறுவார்கள். அதாவது, இந்த நமது உடல், மனம், சக்தி ஆகியவைகளை வாழ்க்கையின் கருவிகளாக உபயோகப் படுத்தக் கற்றுக் கொள்வதனால், அது இன்னும் உயரமான வாய்ப்புகளைப் பெற நமக்கு உதவுகிறது.

இது அறியப்படாமல் இந்த தாந்திரீக முறை வேறு கோணத்தில் அன்று முதல் இன்று வரை கையாளப் படுகின்றது என்பது மிகவும் வருந்தத்தக்க விசயம் என்று கூறலாம். இதுவே, நம்முடைய **அறியாமை** என்று இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது.



# தாந்திரீகம்



ப்ரக்ஞன்